# பேரூராட்சிகள்

2. உரிய அலுவலகக் கட்டடங்கள் இல்லாத 38 பேரூராட்சிகளில், பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் 15 பேரூராட்சிகளுக்கும், அடிப்படை கட்டமைப்பு வசதிக்கான நிதி பற்றாக்குறையை ஈடு செய்வதற்கான பங்களிப்புத் தொகையில் ரூ.4.60 கோடி மதிப்பீட்டில் 23 பேரூராட்சிகளுக்கு, ஆக மொத்தம் ரூ.6.85 கோடி மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டித் தரப்படும்.

3. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புர புனரமைப்புத் திட்டத்தின் கீழ் 43 பேரூராட்சிகளில், மத்திய–மாநில அரசுகளின் 90 சதவீத மானியத்துடன், 7644 குடியிருப்புகள் கட்டும் பணி

மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மீதமுள்ள 518 பேரூராட்சிகளில் மொத்தம் ரூ.130 கோடி செலவில் 12,950 குடியிருப்புகள் இரண்டு ஆண்டுகளில் கட்டப்படும். நடப்பு நிதி ஆண்டில் 259 பேரூராட்சிகளில் ரூ.65.00 கோடி மதிப்பீட்டில் 6475 குடியிருப்புகள் கட்டப்படும்.

4. அரசால் புதியதாக தோற்றுவிக்கப்பட்ட திருப்பூர் மாவட்டம், தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் முன்னேற்றம் அடைந்து வரும் மாவட்டம் ஆகும். இம்மாவட்டத்தில், திருப்பூர் மாநகரம் மட்டுமின்றி இதர நகரப் பகுதிகளும் தொழில் துறையில் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த நகரங்களாக முன்னேற்றமடைந்துள்ளன. அவ்வாறு வளர்ந்து வரும் நகரங்களில் காங்கேயம் பேரூராட்சியும் ஒன்றாகும். இந்த பேரூராட்சியில் உள்கட்டமைப்பு

வசதிகளை மேம்படுத்தி, வளர்ச்சிப் பணிகளை செவ்வனே செய்திட ஏதுவாக, காங்கேயம் பேரூராட்சி நகராட்சி நிலை–2 ஆக தரம் உயர்த்தப்படும்.